ஆய்வுக் கட்டுரை கோரல்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

# தமிழ்க் கிறித்தவக் கலை உலகங்கள்

இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையும் தென்னிந்தியா – தமிழ்நாடு பாளையங்கோட்டைத் தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியின் நாட்டார் வழக்காற்றியல் துறை மற்றும் ஆய்வு மையமும் இணைந்து 'தமிழ்க் கிறித்தவக் கலை உலகங்கள்' என்ற பன்னாட்டுக் கருத்தரங்கினை வரும் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 முதல் 31 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளன.

தென்னிந்தியாவும் இலங்கையும் பாக் நீரிணையாலும் நவீன தேச-அரசுகளின் அரசியல் எல்லைகளாலும் பிரிக்கப்பட்டிருந்தாலும் இந் நிலப்பரப்புகளுக்கிடையிலான உறவு நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டது. இவ்விரு பகுதிகளுக்கும் இடையில் பல நூற்றாண்டுகளாக நிலவிவரும் போக்குவரத்து, இடப்பெயர்வு, வணிகம், பண்பாட்டுத் தொடர்பு போன்றவற்றினால் இவை ஒரு பண்பாட்டுப் பிராந்தியமாக விளங்கி வருகின்றன. இந்தப் பிராந்தியத்தில் மதம் பண்பாட்டின் பல்வேறு வடிவங்களின் உற்பத்தி, நுகர்தல், பரிமாற்றம் என்பவற்றுக்குக் காரணமாக அமைந்துள்ளது. இது தெற்காசிய சமய மரபுகளான சைவம், வைணவம், பௌத்தம் போன்றவற்றிற்கு மட்டுமில்லாமல் இஸ்லாம், கிறித்தவம் ஆகியவற்றிற்கும் பொருந்தும். தெற்காசியாவில் கிறித்தவ சமயத்தின் தோற்றம் புனித தோமையாரின் காலத்திலிருந்து தொடங்குவதாக நம்பப்படுகிறது. அதாவது, கி.பி. 1498இல் கள்ளிக்கோட்டையில் வாஸ்கோடகாமா வந்து இறங்கியபோது இன்றைய கேரளமான மலபாரில் கிறித்தவம் புதிய சமய மரபாக இருக்கவில்லை. மாறாக, புனித தோமையார் வழிபாடும் சிரியன் கிறித்தவ மரபும் இப்பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் இருந்தன. மேலும், இன்று சென்னை மயிலாப்பூரில் அமைந்துள்ள புனித தோமையார் ஆலயமும் போத்துக்கேயரின் காலத்திற்கு முன்பிருந்தே இருந்து வருகிறது.

எனினும், பதினாறாம் நூற்றாண்டுமுதல் தொடங்கும் காலனியமும் மிசனெரிகளின் இடையீடுகளும் 1498இக்கு முன்பில்லாத புதிய கிறித்தவ சமயங்களை உருவாக்கின. கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து ஆகிய சமயங்களைச் சார்ந்த பலவகையான மிசனெரிப் பிரிவுகள் தென்னிந்தியாவிலுள்ள சமூகங்களின் சமயப் பண்பாட்டு வாழ்வில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கின. அதேவேளையில் இவ்விரு சமய மரபுகளும் உள்ளூர் சமயப் பண்பாட்டு மரபுகளின் தாக்கத்தினால் பெரும் மாற்றத்திற்குள்ளாயின. இன்னொருவகையில், கிறித்தவ சமய மரபுகளும் அவை சார்ந்த நிறுவனங்களும் ஏற்படுத்திய தாக்கம் மக்களின் பண்பாட்டு இயங்கியலில் மாற்றத்தைக் கொணர்ந்ததோடு ஏலவே உள்ள சமய மரபுகள் மற்றும் பயில்வுகளின் மறுமலர்ச்சிக்கும் வித்திட்டன. இவை இப்பிராந்தியத்தினுள்ளேயும் அதற்கப்பாலுமுள்ள பகுதிகளை இணைப்பதன் மூலம் காலனிய மற்றும் தேசிய எல்லைகளைத் தாண்டிய புதிய கிறித்தவ நிலவியலை உருவாக்கின. இப்புதிய கிறித்தவ நிலவியல் தமிழ், தெலுங்கு, மலையாளம், மராத்தி, மோடி, சிங்களம் போன்ற மொழியியல் பண்பாடுகளைக் கடந்ததாகவே விளங்கின. ஏனெனில் தஞ்சாவூர் அரசவைக்கும் ஜேர்மனிய புரட்டஸ்தாந்து மிசனெரிகளுக்குமிடையே நிகழ்ந்த, கண்டம் தாண்டிய பண்பாட்டு ஊடாட்டங்கள் போன்றவற்றையும் இக்காலகட்டம் எடுத்துக்காட்டுகிறது. இந்த நிலவியல்கள் கலை சார்ந்த கண்டுபிடிப்புகள், கூட்டிணைவுகள், அணிசேர்ப்புகள், போட்டிகள், தகவமைப்புகள், பரிமாற்றங்கள் ஆகியவற்றிற்கான புதிய களங்களாகவும் உருவெடுத்தன.

கோவாவிலும், கொல்லம், கொச்சி, அம்பலக்காடு, தரங்கம்பாடி, சென்னை, புதுச்சேரி, புன்னைக்காயல் போன்ற தென்னிந்தியப் பகுதிகளிலும் அமைக்கப்பட்ட அச்சு இயந்திர வசதிகள் புதிய பனுவலிய நவீனத்துவத்தை ஏற்படுத்தின. இதேபோல, வட்டுக்கோட்டை செமினெரியும் யாழ்ப்பாணத்தில் அமைந்த அச்சு இயந்திர வசதிகளும் தமிழ்மொழியை நவீனப்படுத்துவதிலும் யாழ்ப்பாணத்தில் பொதுவெளியை விரிவடையச் செய்வதிலும் பெரும் பங்களிப்பைச் செய்தன. உபதேசியார்களைப் பயிற்றுவிக்கும் நோக்கிலும் வேதாகமத்தின் நற்செய்தியைப் பரவலாக்கவும் அமைக்கப்பட்ட இந்த அச்சு இயந்திர வசதிகள் பெருமளவு நாட்டார் வழக்காறுகளையும் இலக்கியங்களையும் தமிழில் பதிப்பிக்கத் தொடங்கின. அதுவரை வாய்மொழி மரபிலும் பனையோலைச் சுவடிகளிலும் வழங்கிவந்த இப்பனுவல்கள் அச்சு ஊடகத்தினூடாக ஒரு புதிய வாசகப் பரப்பை உருவாக்கின. காலனிய அதிகாரிகள், மிசனெரிகள், இவர்களால் ஊக்கம் பெற்ற உள்ளூர் ஆய்வாளர்கள் – சேகரிப்பாளர்கள் ஆகியோரின் பலதரப்பட்ட முயற்சிகளால் நாட்டார் கதைகள், நாட்டார் பாடல்கள், புராணங்கள், பழமொழிகள், கதைப்பாடல்கள் போன்றவை அச்சு வடிவம் பெற்று அவற்றின் பண்பாட்டுச் சூழலைக் கடந்து இப்பெரும் நிலப்பரப்பில் வலம்வரத் தொடங்கின. மேலும், தெற்காசியச் சமூகங்கள் குறித்த இனவரைவியல் பதிவுகளும் ஓவியம் மற்றும் புகைப்படங்களுடன் பதிப்பிக்கப்பட்டன. இப்புதிய அச்சுப் பண்பாடு கவிதையிலிருந்து உரைநடை, பனுவலிலிருந்து நிகழ்த்துதல், நிகழ்த்துதலிலிருந்து காண்பியம் போன்ற வெவ்வேறு

வகைமைகளுக்கு இடையிலான ஊடாட்டத்திற்கு இட்டுச்சென்றது. காலனிய காலகட்டத்திற்கு முன்பிருந்தே பாக் நீரிணையின் இருபக்கமும் நடைபெற்று வந்த பனுவல் மற்றும் கலைச் செயல்பாடு சார்ந்த ஊடாட்டங்கள், கிறித்தவத்தின் தாக்கத்தினால் புதிய பரிமாணங்களை அடைந்தன. தென்னிந்தியா – இலங்கை ஆகிய இருபகுதிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் இப்பண்பாட்டுப் பரிமாற்றங்கள் – எடுத்துக்காட்டாக, கலை, இசை, நாடகம் போன்ற செயல்பாடுகள் – முறையான ஆய்வுக் கவனத்தைப் பெறவில்லை. இப்பின்னணியில், பாக் நீரிணையின் இருபக்கமுள்ள தமிழ்ச் சமூகங்களில் கிறித்தவ சமயம் சார்ந்த ஊடாட்டங்களின் மூலம் கலைச் செயல்பாடுகளில் நிகழ்ந்த பரிமாற்றங்களை, பரிமாணங்களை ஆய்வுக்குட்படுத்தும் நோக்கில் இக்கருத்தரங்கம் ஒழுங்குபடுத்தப்படுகின்றது.

## கருத்தரங்கத் தலைப்புகள்:

- தமிழ்க் கிறித்தவ நிலவியல்களும், அவை சார்ந்த கலையுலகங்களும்
- உள்ளூர்க் கலை வடிவங்களின் உருமாற்றத்திலும் இக்கலை வடிவங்களோடு தொடர்புடைய சமூகப்பிரிப்புக்களின் உருமாற்றத்திலும் கிறித்தவத்தின் பங்கு
- உள்ளூர்ப் பண்பாடுகளும் கிறித்தவ நம்பிக்கைகளின் உடலுருப்படுத்தல்களும்
- பனுவல், வாய்மொழி மற்றும் காண்பிய மொழிபெயர்ப்புகளும் மதத்துவமும்
- உருவ மறுப்புவாதமும் பிரதிநிதித்துவம் சார்ந்த பிரச்சினைகளும்
- கலையில் கிறித்தவமயமாதலும் மேற்கத்தியமயமாதலும்
- தமிழ்க் கிறித்தவக் கலை வடிவங்களும் பயிலுவுகளும் சிங்கள, கன்னட, கொங்கனி, தெலுங்கு, மலையாள, மராத்தி / மோடி பண்பாடுகளும்
- தமிழ்க் கிறித்தவக் கலையின் உற்பத்தியாளர்கள், இடையீட்டாளர்கள், நுகர்வுக் கோலங்கள்.
- தமிழ்ப் பண்பாட்டு வடிவங்களை மேற்கத்திய நாடுகளுக்குக் கடத்துவதிலும் இணைப்பதிலும் வேறுபட்ட கிறித்தவ மிசனெரிகளின் பண்பாடு மற்றும் புலமைசார் தாக்கம்.

இவற்றோடு தொடர்புடைய பிற தலைப்புகளிலும் கட்டுரை வழங்கலாம்.

**கிறித்தவம் தொடர்பான கலை, கட்டடக்கலை, ஓவியங்கள், அலங்காரங்கள், சிற்பங்கள், இசை, நாட்டார் வழக்காறுகள், நாடகம், திருவிழாக்கள், சினிமா போன்றவை சார்ந்து இயங்கும் விருப்பமுடைய ஆய்வாளர்கள் தாங்கள் அளிக்கை செய்ய விரும்பும் கருப்பொருள் தொடர்பாக 500 சொற்களுக்கு மிகாமல் ஆய்வுச்சுருக்கத்தையும் 150 சொற்களுக்குள் தங்களைக் குறித்த தன்விவரக் குறிப்பையும்** tamilchristianaw@gmail.com **என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டுகின்றோம். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் கட்டுரை வழங்கலாம்.**

## முக்கிய தேதிகள்:

| | |
|---|---|
| ஆய்வுச்சுருக்கம் அனுப்பக் கடைசி நாள்: | **நவம்பர் 15, 2023** |
| தெரிவு செய்யப்பட்ட ஆய்வுச்சுருக்கங்கள் பற்றிய அறிவிப்பு: | **டிசம்பர் 01, 2023** |
| முழுக் கட்டுரைகளை அனுப்பக் கடைசி நாள்: | **ஜனவரி 15, 2023** |

கட்டுரைகள் கிட்டத்தட்ட 5000 – 6000 சொற்களுக்குள் அமைதல் நலம். தெரிவு செய்யப்படும் ஆய்வுச்சுருக்கங்கள் கருத்தரங்கின் போது பதிப்பிக்கப்படும். தெரிவு செய்யப்படும் கட்டுரைகள் பின்னர் புத்தகமாக வெளியிடப்படும்.

பங்கேற்பாளர்கள் தங்களுக்கான பயணச்செலவையும், தங்குமிட வசதிகளையும் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தில் தங்குவது தொடர்பான ஆலோசனைகளுக்கும் கருத்தரங்கம் தொடர்பான பிற ஐயப்பாடுகளுக்கும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களை tamilchristianaw@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் அணுகலாம்.

## ஒருங்கிணைப்பாளர்கள்

பேரா. தா. சனாதனன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை)
முனைவர் ச. கார்மேகம் (தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை, தென் இந்தியா).